1986 மே 13] (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(அஅ) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்*''

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்பட்ட சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 36/1980 மூலம் வருவாய்த்துறை வாரியம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 12/1966, 22 (1), 30, 32 (1) ஆம் பிரிவுகளின் கீழ் முன்னால் வருவாய்த் துறை வாரியம் கொண்டு இருந்த செயல் வரம்புக்கு பகுதி கொண்டு இருக்கவும், நிலைப்பெற்று இருந்த அதிகாரங்கள் செலுத்தவும், செய்து வந்த பணிகளை, செய்யவும் இந்தச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒரு அறிவிக்கை படிநிலச் சீர்திருத்த ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு 12 ஆம் சட்டத்தில் வருவாய்த்துறை வாரியம் நகர்ப்புற நிலவரி ஆணையர் என்ற குறிப்புகள் வரும் இடங்களில் எல்லாம் அவற்றை முறையே நிலச் சீர்திருத்த ஆணையாளர், நகர்ப்புற நில வரி இயக்குநர் என்று மாற்றம் செய்து, அது தற்போது அவசியம் என்று கருதப்படுகிறது. அதன் விளைவாக இந்தச் சட்டத்தில் வேறு சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று உத்தேசிக்

* 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு மேற்கண்ட நோக்கத்தை எய்த விழைகிறது. எனவே இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று, நிறைவேற்றித் தரும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தளநாயகர் அவர்களே, நம்முடைய நகர்ப்புற நிலவரி திருத்த சட்டமுன்வடிவின் மீது சில கருத்துக்களை குறிப்பிடலாம் என்று விழைகிறேன்.

நம்முடைய நகர்ப்புற நிலவரிச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நம்முடைய நகரங்களிலே தனியார் அறக்கட்டளைகள், பொது அறக் கட்டளைகள் மூலமாக பல்வேறு நிலங்களை, பல்வேறு இடங்களை அவர்களுடைய புழக்கத்திற்கு வைத்துக் கொண்டு, சரியான முறையிலே நிர்வகிக்கின்றார்களா என்பதை நல்லமுறையில் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நோக்கம் சிறப்பாக இருக்கிறதா ? உபரி நிலத்தைத் தந்திருக்கிறார்களா? அப்படித் தந்திருந்தால், உபரி நிலங்கள் எவ்வளவு என்கின்ற புள்ளிவிவரங்களை நம்முடைய அரசு தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும் பல்வேறு அறக் கட்டளைகள் செய்திருக்கின்ற சீர்திருத்தங்களையெல்லாம் தவிர்த்துவிட்டு, அந்த உபரி நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, நல்லமுறையில், நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு மாடிக் கட்டிடங்கள், 5 அடுக்கு 7 அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டி, அவர்கள் அப்பகுதிகளிலே சுகாதாரக் கேடுகளை விளைவிக்கின்றார்கள். எனவே உயர்ந்த நிலையை அடைய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்ற அடிப்படையில் பார்க்கிறபோது, அதனால் பயனுற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை என்ற சூழ்நிலையைத் தான் நாம் பார்க்கிறோம். 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்பதற்கு ஒரு டெபனிஷன் சரியான முறையில் குறிப்பிடப்படவில்லை. அப்படி சரியான சட்டம் இல்லாத சூழ்நிலையில், நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் புஞ்சை நிலங்களில் ஆண்டுக்கு ஒரு முறை தான் விளைவிக்கிறார்கள். மீதமுள்ள 6 மாதங்களில் பயிரிடமுடியாத சூழ்நிலையில், விவசாய நிலம் இல்லை என்று சொல்லி, 'அர்பன் லாண்ட் டாக்ஸ்' என்று தனியாக வரி விதிக்கின்ற நிலையைத் தவிர்க்க வேண்டும்.

பல்வேறு இடங்களில் திடீர் திடீர் நகர்கள் அடிக்கடி எழும்புகின்றன. அதனால் அடையாற்றிலிருந்து மகாபலிபுரம், அமைந்தகரையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர், ஆலந்தூரிலிருந்து தாம்பரம் வரையில் உள்ள நிலங்களை அதிகமாக

1986 மே 13] (திரு. ஜி. கே. ஜெ. பாரதி)

எடுத்து, நிலங்களை உபரியாக விற்றுவிடுகிறார்கள். ஆகவே சென்னைப் பெருநகர்களில் உள்ளவர்கள் நிலங்களை வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நம்முடைய அரசும், அமைச்சர் பெருந்தகை அவர்களும் அறிவார்கள் மாநகராட்சி நிலங்களையும், பொதுப்பணித் துறை நிலங்களையும் செல்வந்தர்கள், பணக்காரர்கள், 99 ஆண்டு என்று லீஸ் எடுத்துக்கொண்டு, அதனால், மெரினாக் கடற்கரை, அண்ணா சாலை போன்ற பகுதிகளில் அந்த நிலங்களை எல்லாம் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை யெல்லாம், மீண்டும் அவர்களிடத்திலிருந்து எடுத்து, வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் போன்ற அரசாங்க அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள முடியுமா ? அப்படி எடுத்துக்கொள்கின்ற ஒரு வாய்ப்பை, ஒரு கொள்கை அளவில், பாலிசி எடுத்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பொது அறக்கட்டளைகள் மூலமாக பல்வேறு இடங்களை மடக்கி வைத்து இருக்கின்ற மிகப் பெரிய செல்வந்தர்கள், 10 ஏக்கர் உள்ள இடங்களில், சிறிய கட்டிடங்களாக கட்டி வைத்துக்கொண்டு, உல்லாச வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க முடியுமா ? அதைத் தகர்க்க இந்த அரசு முன்வருமா ?

எனக்குத் தெரிந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை குரோம்பேட்டையில் 10, 15 ஏக்கர் நிலங்களை சொந்தமாக வைத்துக்கொண்டு, அதிலே சவுக்குத் தோப்பு வைத்துக்கொண்டு, 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்று அந்த நிலத்திற்கு வருகின்றபோது, சில அதிகாரிகளே கூட, அதற்காக ஒரு ட்ரஸ்ட் வைத்துக்கொள்ளுங்கள், விதி விலக்கு கொடுத்து விடலாம் என்ற ஓர் ஓட்டையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று சொல்லி, நகர்ப்புற வாய்ப்பிலே எல்லா நகரங்களிலும், திடீர் நகர் என்று உருவாகி, அதனால் விளையும் கேடுகளைத் தவிர்க்கவும், செல்வந்தர்களின் பிடியிலிருந்து நகர்ப்பு சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று நினைவுப் படுத்தி, அதற்கான அறிவிப்பை அமைச்சர் பெருந்தகை அவர்கள் விளக்க வேண்டுமென்று கூறி, இந்த திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன்.

(பிற்பகல் 12.20)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்பு மிகு உறுப்பினர் பாரதி அவர்கள் குறிப்பிட்டது போல, இன்று நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில், பலர் 'டிரஸ்ட்டுகள்'

என்ற பெயரில் இடங்களை பினாமியாகக் கையிலே வைத்துக் கொண்டு காரியங்களை நடத்திச் செல்வதற்குள்ள முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ஏற்கனவே ரெவின்யு போர்டு ஒழிக்கப்பட்டது என்றாலும் அதற்குப் பிறகு அந்தப் பொறுப்பிலே வந்திருக்கிற அதிகாரிகள் என்னென்ன முறைகளில் நடவடிக்கை எடுத்து நவற்றை எல்லாம் தடுக்க வேண்டுமோ அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இன்றுகூட நமக்குத் தெரியும்—பல இடங்களில் 'ரியல் எஸ்டேட்ஸ்' என்ற பெயரில் இடங்களை, 100 ஏக்கர், 200 ஏக்கர் 300 ஏக்கர் என்ற முறையில் வாங்கி அதை பிளாட் டாகப் போட்டு விற்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி, அதன் வழி யாகவும், நகரங்களிலே உள்ள நிலங்களைப் பொறுத்தவரையில், என்ன என்ன முறையிலே அது ஏழை மக்களுக்குச் செல்ல உரிமை உண்டோ அதை தடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக் கப்படுகின்றன.

'லேண்ட் சீலிங் ஆக்ட்டைப்' பொறுத்தவரையில் இன் றைக்கு அந்தச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு கொடுக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அவையிலே கூட இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு விஷயம் பேசப்பட்டது. திருச்சி நகரத்தில் எப்படி, வி.ஜி.பி. கம்பெனி 1,000 ஏக்கர் நிலத்தை அங்கே உள்ள ரெவின்யூ அதி காரிகளை சுவாதீனப்படுத்தி தங்களுடைய தேவைக்காக பல ஆட்கள் பெயரில் பினாமி பட்டா போட்டு, வாங்கி, இன்று அவர்கள் தங்களுடைய இடமாக மாற்றிக்கொள்ளக்கூடிய அப் படிப்பட்ட நடவடிக்கைகள் நகரங்களைப் பொறுத்தவரையில் நடந்துகொண்டிருக்கின்றன. இதைச் சொல்லக்கூடிய நேரத்தில் இன்னும் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

அதாவது, இன்று 'அப்பார்ட்மெண்ட்ஸ்' என்ற முறையில் நகரத்தில் ஒரு இடத்திலேயே 3 மாடிகள், 4 மாடிகள், 8 மாடிகள் கட்டிடத்தைக் கட்டி, அது விற்கப்படுகிறது. ஆனால், அந்த இடங்களை வாங்கக்கூடியவர்களுக்கு பட்டா இல்லாது அல்லது அது தங்களுக்குச் சொந்தமானது என்ற முறையில் சொந்தம் கொண்டாட முடியாத நிலை இருந்து கொண்டிருப்பதன் காரண மாக, அவர்களுக்கு அந்த இடத்தை வைத்துக்கொண்டு, வங்கி களில் லோன் வாங்க முடியாத நிலை இருக்கிறது.

ஆகவே, 'அர்பன் லேண்ட் டாக்ஸ்' என்ற முறையில், இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கிறபோது, இப்படி மக்களுக்கு, நகர்ப்புறங்களிலே உள்ள மக்களைப் பொறுத்தவரையில் அதுவும் சின்ன இடங்களைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் 'கிளியரான பட்டா இல்லாததன் காரணமாகவும், முறையான ரிக்கார்டு இல்லாததன் காரணமாகவும், அவர்களுக்கு பல பிரச் சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1986 மே 13) [திரு ஜே. ஹேமச்சந்திரன்]

அந்த முறையிலே ஒரு வேளை இந்த ரெவின்யூ போர்டு ஒழிக்கப்பட்டதற்குப் பிறகு, இன்றைக்கு அந்த 'டைரக்டர்' என்ற போஸ்ட்டும், கமிஷனர் ஆஃப் லேண்ட் ரிபார்ம்ஸ்' என்ற முறையில் உள்ள போஸ்ட்டும் இல்லாத காரணத்தால்தான் அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று 'லேண்ட் ரிபார்ம்ஸைப்' பொறுத்த வரையில், கமிஷனர் ஆஃப் லேண்ட் ரிபார்ம்ஸ் என்ற ஆபிசர் போடப்பட்டு இருக்கிறார். அந்த லேண்ட் ரிபார்ம்ஸ் சம்பந்தமாக இன்றைக்கு எடுக்கப்பட்டு இருக்கிற நடவடிக்கைகள் மிகவும் கம்மியாக இருக்கிறது. லேண்ட் ரிபார்ம்ஸைப் பொறுத்த வரையில், என்னென்ன முறையில்—மிக முக்கியமாக நிலத்தைப் பொறுத்த வரையில் இன்று அதிலே, soil to the tiller என்ற முறையில் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு என்ன என்னமுறையில் உள்ள 'லேண்ட் ரிபார்ம்ஸ்' இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டுமோ, அந்த முறையில் லேண்ட் ரிபார்ம்ஸ் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. அந்த முறையில் இந்த லேண்ட் ரியார்ம்ஸை ஏற்படுத்தும் வகையில், இந்த ஆபிசர்களுடைய வேலைகளை அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, லேண்ட் ரிபார்ம்ஸைப் பொறுத்தவரையில் இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், பல இடங்களிலே பட்டா வழங்கப்படுகிறது என்று விளம்பரம் செய்யப்படுகிறதே தவிர, ஆனால் யதார்த்த நிலையில் பார்த்தால் அந்த விவசாயிகளுக்கு பட்டா போய்ச் சேராத நிலைமை இருக்கிறது. விழாக்களில் பத்து பேர்களுக்கு பட்டாக்களைக் கொடுத்துவிட்டு, மீதியுள்ளவர்களை பிறகு அலுவலகத்தில் வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அலுவலகத்திற்குப் போகும் நேரத்தில் பட்டா கொடுக்கப்படாமல் இழுத்தடிக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இன்று பல இடங்களில் அதுவும் குறிப்பாக வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அவர்கள் வீடு கட்டுவதற்கு லோன்வாங்குவதற்காகச் செல்லக் கூடிய நேரத்தில், இந்த நிலத்தினுடைய சொந்தக்காரர் என்று காட்டுவதற்கு அந்த அத்தாட்சி தேவைப்படுகிறது. அந்த அத்தாட்சி இல்லாததால் காலா காலத்திலே அது கொடுக்கப்படாததால் இன்று மக்களுக்கு அதுவும் குறிப்பாக நடுத்தர மக்களுக்கும், ஏழைமக்களுக்கும் பல பிரச்சனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நிலத்தைப் பொறுத்தவரையில் உடைமை என்று கொண்டாடத் தகுந்த அளவிற்கு என்னென்ன சட்டப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட வேண்டுமோ, என்னென்ன நடைமுறைப் பாதுகாப்புகளைக் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(டாக்டர் இரா, நெடுஞ்செழியன்) [1986 மே 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே நகர்ப்புற நிலவரிச் சட்டத்திலே இருக்கின்ற சிலபல தன்மைகளையும், குறைபாடுகளையும், அதில் செய்யப்பட வேண்டியவைகளையும் பற்றிச் சொன்னார்கள். அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்தச் சட்ட முன் வடிவினுடைய நோக்கம், ஏற்கனவே வாரியமாக இருந்து செய்த பணிகளை இப்பொழுது சிறப்பு ஆணையர்கள் ஏற்றுச் செய்கின்றார்கள். 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தில் வாரியம் வாரியம் என்று வருகின்றது. ஆக அந்த இடத்தில் ஆணையர் ஆணையர் என்று மாற்றுவதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஆகவே, அந்த வகையில் எங்கெங்கு ஆணையர் என்று வருகிறதோ, ஆணையாளர் என்று வருகின்ற இடத்தில் அதற்கு மாறாக—வாரியம் என்று வருகின்ற இடத்தில் ஆணையாளர் என்றும் மற்றைய இடங்களில் அதை மாற்றி மாற்றி அமைக்க வேண்டுமென்றும், ஆணையாளர் என்ற சொல்லுக்குப் பதிலாக இயக்குநர் என்ற ஒரு சொல்லையும், வாரியம் என்று வருகின்ற இடத்திலே—ஆணையாளர் என்று வருகின்ற இடத்தில், என்ற சொல்லுக்குப் பதிலாக இயக்குநர் என்ற சொல்லும், ''அதன்'' என்று வருகின்ற இடத்தில் ''அவருடைய'' என்றும், ''அதாகவே'' என்னும் இடத்தில் ''அவராகவே'' என்றும் இப்படிப்பட்ட முறையில் இந்த வாரியம் என்ற சொல்லை எடுத்துவிட்டு ஆணையாளர் என்ற சொல்லையும், இயக்குநர் என்ற சொல்லையும்—அப்படி இயக்குநர் என்ற சொல்லச் செய்வது தான் இதன் முக்கிய நோக்கம். ஆகவே, இந்த நோக்கத்தோடு கொண்டுவரப்படுகிறதே தவிர, மற்றைய குறிப்புகளைப் பற்றியெல்லாம் தனியாக, விவாதித்து அதுபற்றித் தனி முடிவெடுக்க வேண்டும். ஆகவே, இந்தப் பெயர் மாற்றம் மட்டும்தான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் என்று சொல்லி, இதை மட்டும் நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(1986 மே 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆஆ) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

(பிற்பகல் 12–30)

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டத்தின் மூலம் (தமிழ்நாடு சட்டம் 32/84) இல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதும், அவ்வட்டவணையில் பின்னர் ஓர் அறிவிக்கை மூலம் சேர்க்கப்பட்டுள்ளதுமான பகுதி களில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு, 30–6–1984 உடன் முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கோ, அல்லது அதற்கு முந்தைய எந்தவொரு விளைச்சல் ஆண்டுக்கோ, செலுத்தத்தக்க குத்தகையை செலுத்தாமைக்காக நிலத்திலிருந்து வெளி யேற்றப்படாமல் 15–1–1985 (இந்நாள் உட்பட) பாதுகாப்பு அளிக்கப்பட்டது. பயிரிடு குத்தகைதாரர்கள், நிலச் சொந்தக் காரருக்கோ அல்லது பொதுப் பொறுப்புக் கழகத்திற்கோ செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி கணிசமான அளவு நிலுவை யாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சி நிலவியதாலும், இதனைத் தொடர்ந்து வெள்ள

**1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.